# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 28 ஹிஜ்ரி 1437 ரஜப் ஏப்ரல் 2016

இலவசம்





# ஒருங்கிணைந்து நாம் உயர்வோம்!

# பள்ளிவாசல் கட்டுமான நிதிச் சந்தா உயர்வு அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் அறிவிப்பு

பள்ளிவாசல் கட்டுமானம், மெண்டாக்கி நிதிக்கு சிங்கப்பூர் முஸ்லிம்கள் வழங்கிவரும் மாதாந்திர சந்தா உயர்த்தப்படுகிறது. ஜூன் மாதத்திலிருந்து அது நடப்புக்கு வரும் என்று முஸ்லிம் விவகாரங் களுக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் அறிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டுக்குப் பிறகு, இந்த நிதிப் பங்களிப்பில் முதல் முறையாக இப்போது தான் மாற்றம் செய்யப்படுகிறது. 12.3.2016 அன்று நடை பெற்ற முயிஸ் பணித்திட்டக் கருத்தரங்கில் இந்த மாற்றங்கள் தெரிவிக்கப்பட்டன. வருமானத்திற்கு ஏற்றவாறு நிதிப் பங்களிப்பும் இருக்கும் விதத்தில் மாற்றங்கள் செய்யப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

மாத வருமானமாக 4,000 வெள்ளி முதல் 10,000 வெள்ளி வரை ஈட்டுவோருக்கு நான்கு கூடுதல் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. அதன்படி, 4,000 வெள்ளி முதல் 6,000 வரை வருமானம் ஈட்டுபவர்கள் வரும் ஜூன் மாதத்திலிருந்து பள்ளிவாசல் கட்டுமானம், மெண்டாக்கி நிதிக்கு 3.50 வெள்ளி கூடுதலாக $19.50 செலுத்த வேண்டும். 10,000 வெள்ளிக்கு மேல் வருமானம் ஈட்டுபவர்கள் மாதச் சந்தாவாக $26 செலுத்துவார்கள். இப்போதுள்ள கட்டணத்தைவிட இது $10 அதிகம்.

ஆயிரம் வெள்ளிக்கும் குறைவாக மாத வருமானம் பெறுவோரின் சந்தா கட்டணம் ஒரு வெள்ளி கூடுகிறது. அதனால் அவர்கள் இனி $3 செலுத்துவார்கள். ஆயிரம் வெள்ளி முதல் இரண்டா யிரம் வெள்ளி வரை வருமானம் ஈட்டுபவர்களின் மாதாந்திரச் சந்தா $4.50 ஆக உயர்த்தப்படுகிறது.

இந்த மாற்றங்களின் மூலம் ஆண்டு அடிப்படையிலான நிதிப் பங்களிப்பு 6 மில்லியன் வெள்ளி கூடி, 26.2 மில்லியனாக உயரும்.

சிங்கப்பூரில் புதிய பள்ளிவாசல்களைக் கட்டவும், பழைய பள்ளிவாசல்களைச் சீரமைக்கவும் இந்த நிதித்திட்டம் 1975ல் அறிமுகப் படுத்தப்பட் டது. முஸ்லிம்களின் கல்வி, சமூகத் திட்டங்களுக்கும் ஆதரவு அளிக்கிறது.

“நமது சமூக, சமய வாழ்க்கையை மேம்படுத்த இன்னும் நீண்ட காலம் ஆகலாம்,” என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கட்டுமானச் செலவுகள் அதிகரித்து வருவதால், இப்போதைய பங்களிப்பு விகிதத்தைக் கொண்டு பள்ளிவாசல்களைக் கட்டுவதற்கும் மேம்படுத்துவதற்கும் ஆதரவு வழங்க இயலாது என்று முயிஸ் தலைமை நிர்வாக அதிகாரி, அப்துல் ரசாக் மரைக்காயர் கூறினார்.

பள்ளிவாசல் கட்டுமான நிதியின் மூலம் முஹாஜிரின் பள்ளிவாசல் முதன்முதலில் கட்டப்பட் டது. 1976ல் முடிவடைந்த அதன் கட்டுமானப் பணிகளுக்கு $1.2 மில்லியன் வெள்ளி செலவானது. சென்ற ஆண்டு கட்டுமானப் பணிகள் நிறைவுபெற்ற பொங்கோல் அல்-இஸ்லா பள்ளிவாசலுக்கு 15.2 மில்லியன் வெள்ளி செலவாயிற்று.

நமது பழைய பள்ளிவாசல்கள் சிலவற்றை பழுதுபார்த்து புதிய வசதிகளைச் செய்யவேண்டிய அவசியம் உள்ளதாகவும், அப்துல் ரசாக் மரைக்காயர் தெரிவித்தார்.

பள்ளிவாசல், மெண்டாக்கி நிதிப் பங்களிப்பு, குறித்த மேல் விவரங்களை www.mbmf.sg இணையத் தளத்தில் காணலாம்.

# கடையநல்லூர் முஸ்லிம் லீக் குடும்பதின விழா

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் குடும்பதினத்தை குதூகலமாகக் கொண்டாடியது. பீஷான் பொழுதுபோக்குப் பூங்காவில் 29.11.2015 அன்று நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், சுமார் 750 உறுப்பினர்கள் குடும்ப சகிதமாகக் கலந்து கொண்டு தங்கள் கடப்பாட்டைப் புலப்படுத்தினர்.

குடும்ப உறுப்பினர்கள் பலருக்கும் ஏற்ற பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.



# சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் 75ஆம் ஆண்டு நிறைவு

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் 75ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடவிருக்கிறது. 1941 ஜூன் 3ஆம் தேதி தொடங்கப்பட்ட இது தொய்வின்றி ஆற்றிவரும் நற்பணிகளை நாடறியும்.

கடையநல்லூர் முஸ்லிம் லீக் 8.8.1941 அன்று முறையாகப் பதிவு செய்யப்பட்டது. சங்கத்திற்கு முறையான அங்கீகாரம் கிடைத்த நாள் அதுவேயாகும். அதற்கான அரும்பணியை ஆற்றிய முன்னோடி அல்மர்ஹூம் இமாம் காதி ஹாஃபிஸ் எஸ்.ஏ.முஹம்மது அவர்கள்.

75ஆம் ஆண்டு விழாவைக் கொண்டா விருக்கும் இந்தத் தருணத்தில், இப்பெரியாரையும் சங்கத்திற்காகப் பாடுபட்ட மற்றவர்களையும் நினைவுகூர சமூகம் கடமைப்பட்டிருப்பதாக சங்க நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

நமது சமூகம், அளவில் சிறியதாக இருக்கலாம், ஆனால் வரலாற்றில் தடம் பதித்த ஒரு சமூகம். தேசிய நிர்மாணத்திலும், சமூகப்பிணைப் பிலும், கல்வித்துறையிலும், இஸ்லாமியப் பண்பாடுகளைப் பரப்புவதிலும், நாம் முத்திரை பதித்துள்ளோம் என்று சங்க நிர்வாகிகள் பெருமிதம் தெரிவித்தனர்.

நகரின் மத்திய பகுதியில் நமது பெயர் சொல்ல கடையநல்லூர் தெரு உயிரோட்டம் மிக்க வீதியாக விளங்குகிறது.

"நாம் யார், நாம் என்ன செய்தோம், கட்டுக்கோப்பான ஒரு சமுதாயத்தை எப்படி உருவாக்கினோம், என்பதை இளைய தலைமுறை யினரும் அறிந்து கொள்ள வேண்டும். அதற்கான ஆதாரங்களைத் திரட்டி, வரலாற்றின் அடிச்சுவடுக ளைப் இப்பொழுது பதிவு செய்து கொண்டிருக்கி றோம். 75ஆம் ஆண்டு நிறைவு விழாவில் அரிய காட்சிகளைக் காணும் நல்வாய்ப்பு அனைவருக்கும் கிடைக்கவுள்ளது," என்கிறார் கடையநல்லூர் முஸ்லிம் லீகின் தலைவர் அல்ஹாஜ் நசீர் கனி.

தொடக்கத்தில் 300 உறுப்பினர்களைக் கொண்டிருந்த இச்சங்கம், இன்று 1,500 உறுப்பினர் களைக் கொண்டு 20,000 பேரை பிரதிநிதிக்கும் அமைப்பாக விரிவடைந்திருக்கிறது.

"சிங்கப்பூர் 50ஆம் ஆண்டு நிறைவு பொன்விழாவைக் கொண்டாட, புதிய சின்னத்தை உருவாக்கியது போல, நாமும் புதிய முழக்க வரியைக் கொண்டு பீடு நடைபோடவுள்ளோம். எதிர்காலத் தலைமுறை புதிய கனவுகள் எனும் முழக்கவரிக்குப் புத்துயிர் கொடுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்துள்ளோம்" என்று சங்கம் கூறுகிறது.

அரசாங்கத் தலைவர்கள், பல்வேறு சமூகப் பிரதிநிதிகள், பல இன சமுதாயப் பேரார்வலர்கள், ஆகி யோரோடு உறுப்பினர்கள் தங்கள் குடும்பத்தாருடன் கலந்து கொள்ளும் விருந்துபசரிப்புக்கும் சங்கம் ஆயத்தமாகி வருவதாக நிர்வாகக் குழு கூறுகிறது.

---

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பல சாராரும் பங்கெடுப்பதற்கு விளையாட்டுக் கூடாரங்கள் அமைக்கப் பட்டிருந்தன. மேடைநிகழ்ச்சிகள் திரைப்படக் காட்சியைப் போல தொய்வில்லாமல் நடைபெற்றுக் கொண்டிருந்தன. நகைச்சுவை அங்கங்களும் இடம் பெற்றன.

பீஷான் குழுத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சக்தியாண்டி சுபாஹட் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். இது போன்ற குடும்ப நிகழ்ச்சிகளை அரசாங்கம் வரவேற்பதாக அவர் கூறினார். இவ்வித மதிப்புகளையும் பண்புகளையும் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வலியுறுத்த வேண்டிய அவசியத்தையும் அவர் தமது உரையில் வலியுறுத்தினார்.

நிகழ்ச்சியின் நிறைவாக அனைவருக்கும் அன்பளிப்புப் பைகள் வழங்கப்பட்டன, புன்னகைப் பொலிவுடன் விடைபெற்ற குடும்பத்தினருக்கு கடையநல்லூர் முஸ்லிம் லீக் நிர்வாகிகள் நன்றியையும் நல்லன்பையும் தெரிவித்துக் கொண்டனர்.



# சிங்கப்பூர் தமிழ் முஸ்லிம்கள் வரலாற்று நூல் வெளியீட்டு விழா

சிங்கப்பூர் தமிழ் முஸ்லிம்களின் வரலாற்றை விரிவாக எடுத்துரைக்கும் இனிய நூல் வெளியிடப் பட்டிருக்கிறது. சமூகத் தலைவரும், மூத்த தமிழாசிரியருமான மு.அ.மசூதும், முன்னணி எழுத்தாளரும், விருதாளருமான ஜே.எம்.சாலியும் இந்த நூலை இயற்றியுள்ளனர். இருவரும் நீண்டகாலமாக முயற்சி செய்து இந்நூலைப் படைத்துள்ளனர்.

தமிழ் முஸ்லிம்களின் வரலாற்றுப் பின்னணி, அவர்களின் சிங்கப்பூர் வருகை, நாட்டின் வளர்ச்சிக்கு அவர்கள் ஆற்றிய பன்முனைப் பணிகள் முதலான அங்கங்களைக் கொண்டது இந்த நூல்.

சிங்கப்பூரின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு, 26.9.2015 மாலை ஷெண்டன் வே மாநாட்டு மண்டபத்தில், கடையநல்லூர் முஸ்லிம் லீக் ஏற்பாட்டில், விழா நடைபெற்றது. அதன் தலைவர் அ.மு.நசீர் கனி தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக துணைப்பிரதமரும், நிதி அமைச்சருமான திரு. தர்மன் சண்முகரத்னம் கலந்து கொண்டு அதிகாரபூர்வமாக நூலை வெளியிட்டுச் சிறப்பித்தார்.

சிங்கப்பூர் தமிழ் முஸ்லிம்களின் வணிகம், மொழி, கல்வி, சமயம், கலை, செய்தித் துறை முதலான பங்களிப்பை வரலாற்றுக் கண்ணோட்டத் தில் மிக விரிவாக இந்த நூல் எடுத்துரைக்கிறது. எதிர்கால ஆய்வுகளுக்கு தங்கள் நூல் கைகொடுக்கும் என்று இரு ஆசிரியர்களும் நம்பிக்கையும் மனநிறைவும் தெரிவித்தனர்.

முன்னாள் வெளியுறவு துணை அமைச்சர், ஜைனுல் ஆபிதீன் ரஷீத் பாராட்டு உரையாற்றினார். சிங்கப்பூர் பல இன சமூகமாக விளங்குவதில், நமக் குப் பெருமை. இங்குள்ள தமிழ் முஸ்லிம் சமூகத்தின் முன்னோர்கள், நீண்ட தூரத்திலிருந்து வந்து நம் நாட்டின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்கள் என்று அவர் விவரித்தார்.






ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத் தலைவர், டாக்டர் முஹிய்யத்தீன் அப்துல் காதர், இந்த நூல் அடுத்த தலைமுறையினருக்கு பெரியதொரு பொக்கிஷமாகத் திகழும் என்று தமது வாழ்த்துரையில் தெரிவித்தார்.

வெளியீட்டு விழா விற்பனை மூலம் கிடைத்த தொகையில், 10,000 வெள்ளி சிண்டாவுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

மினி என்வைரன்மெண்ட் நிறுவனத்தின் உரிமையாளர் எஸ்.எம்.அப்துல் ஜலீல் 50,000 வெள்ளி வழங்கினார். நூலாசிரியர்கள் உள்ளிட்ட பலரும் இணைந்து 50,000 வெள்ளி அளித்தனர். அந்த ஒரு லட்சம் வெள்ளி புதிதாகத் தொடங்கப் பட்ட சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டது.

"தமிழ் முஸ்லிம்களின் முன்னுதாரணமான பன்முகப் பணிகளைத் தொகுத்தும், பகுத்தும், ஆவணப்படுத்தியும், இருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒரு பணியாகும். இது இல்லங்கள் தோறும் இருக்க வேண்டிய ஒரு நூல்," என்று சிங்கப்பூர் கல்வி அமைச்சின் முன்னாள் உதவி இயக்குநர் சாமுவேல் துரைசிங்கம் தமது வாழ்த்துச் செய்தியில் பாராட்டினார்.

"இத்தனை சிறிய சமூகத்தில் இவ்வளவு விஷயங்களா என வியக்க வைக்கிறது இந்நூல். நூலாசிரியர்கள் இருவரும் பெரும் பாடுபட்டு நூலை நமக்குப் படைத்திருக்கிறாரகள்," என்று தென்கிழக் காசிய ஆய்வுக்கழக சிறப்பு ஆய்வாளர், அருண் மகிழ்நன் குறிப்பிட்டார்.

"மு.அ.மசூது, ஜே.எம்.சாலி ஆகிய இருவரின் அயரா உழைப்பு இந்நூலை சிங்கப்பூர் தமிழர் களுக்கும் சிங்கப்பூரருக்கும் சிறந்ததொரு நிலைக் களனாகத் தந்துள்ளது. எதிர்காலத்தில் இந்நூல் பலராலும் பாராட்டப்படும் என்பது உறுதி," ஆய்வாளர், பேராசிரியர் அ. வீரமணி வாழ்த்தினார்.

# நமது எழுத்தாளர் ஜே.எம்.சாலிக்கு தென்கிழக்கு ஆசிய விருது

தாய்லாந்தில் வழங்கப்படும் தென்கிழக்கு ஆசிய எழுத்து விருது சிறப்புக்குரியது. சிங்கப்பூர் எழுத்தாளர் என்ற முறையில் மதிப்புமிக்க அந்த விருதை ஜே.எம்.சாலி பெற்றார்.

பேங்காக் மாண்டரின் ஓரியண்டல் ஓட்டலில் 14.12.2015 அன்று தாய்லாந்து இளவரசி சிரிவண்ணவாரி நாரிரத்தனா அந்த விருதை வழங்கினார். தாம் எழுதிய 57 நூல்களில் இரண்டை இளவரசியிடம் கொடுத்தார் எழுத்தாளர் சாலி.

இரண்டு நிமிடம் பேசும்படி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டார்கள். தமிழிலும் ஆங்கில மொழியிலும் சாலி பேசினார்.

“தாய்லாந்து தலைநகர் பேங்காக்கில் SEA 2015 விருதுபெறும் இந்த நாள் என்றென்றும் நினைவில் நிற்கும் இனிய நாள். பெருமைக்குரிய இந்த விருதை வழங்கி, பல நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் நல்வாய்ப்பைத் தந்த ஏற்பாட்டுக் குழுவினருக்கு மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிங்கப்பூருக்கு அனைத்துலக அங்கீகாரத்தைத்தேடித் தந்த நான்கு மலாய், சீன, தமிழ் எழுத்தாளர்களின் பெயரை, 2005ல் அன்றைய தகவல், கலை, அமைச்சர் டாக்டர் லீ பூன் யாங் நாடாளுமன்றத்தில் அறிவித்ததை இந்த விழாவில் நினைவுகூர விரும்புகிறேன். அவர் அன்றைக்குக் குறிப்பிட்ட ஒரே தமிழ் எழுத்தாளன் நான் என்பதை பணிவன்புடன் ஏற்று இலக்கியப் பயணத்தைத் தொடர்கிறேன். அதற்குரிய ஓர் அங்கீகாரமாக 2012ல் எனக்கு வழங்கப்பட்ட சிங்கப்பூர் கலாசாரப் பதக்க விருதை மதிக்கிறேன். நாவலாசிரியர், நாளிதழ்-வார இதழ் பொறுப்பாசிரியர், வானொலி, தொலைக்காட்சி மூத்த செய்தி ஆசிரியர், நாடக எழுத்தாளர், இலக்கியப் போட்டிகளின் நடுவர், பயிலரங்குகளின் பொறுப்பாளர் முதலான பன்முனை இலக்கிய-ஊடகப் பணிகளில் தொய்வில்லாமல் ஈடுபட்டு வந்துள்ளேன். எனக்கு மதிப்புமிக்க 2015 தென்கிழக்கு ஆசிய இலக்கிய விருது வழங்கிச் சிறப்பிக்கும் தாய்லாந்து, சிங்கப்பூர் ஏற்பாட்டுக் குழுவினருக்கு இதயம் நிறைந்த நன்றியையும், நல்லன்பையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விருதை வழங்கிவரும் அமைப்புகளின் அரும்பணிகளை உலகறியச் செய்வதற்கு ஒத்துழைப்பேன் என்ற உறுதியையும் இவ்வரங்கில் தெரிவித்துக் கொள்கிறேன்.”

இரண்டாம் நாள் மாலையில் தென்கிழக்கு ஆசிய விருது பெற்ற எழுத்தாளர்களுக்கு அன்பளிப்புக் காசோலை வழங்கப்பட்டு விருந்துபசரிப்பும் நடத்தப்பட்டது.



மறுநாள் நடைபெற்ற கவியரங்கம் நல்ல வரவேற்பைப் பெற்றது. தாய்மொழியில் அல்லது ஆங்கிலத்தில் கவிதைகளைப் படிக்கும்படி விழா ஏற்பாட்டுக் குழு கேட்டுக் கொண்டதால், ‘எழுதுகோல்’ என்ற தலைப்பில் எழுதிய கவிதையை இருமொழிகளிலும் படித்தேன். எனக்கு அளிக்கப்பட்ட இந்த விருது நமது சமூகத்துக்குரிய சிறப்பு அங்கீகாரம் என்று பெருமிதத்துடன் கூறினேன்.

### பெரியார் விருது

அறுபது ஆண்டுகளுக்கு மேலாக இலக்கிய, இதழியல் பணிகளில் ஈடுபட்டுள்ள எழுத்தாளர் ஜே.எம்.சாலி பெரியார் விருதையும் பெற்றிருக்கிறார் என்று பத்திரிகைகள் பாராட்டின.

சிங்கப்பூர் பெரியார் சமூக சேவை மன்றம், 2015 நவம்பர் முதல் தேதி உமறுப்புலவர் தமிழ்மொழி நிலைய அரங்கில் நடத்திய பெரியார் கண்ட வாழ்வியல் விழாவில், இந்தச் சிறப்பு விருதை வழங்கியது.

## நபி மொழி

ஒருவர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, “ரஸூலல்லாஹ், எனக்கு ஏதேனும் அறிவுரை பகருங்கள்!” என்று வேண்டினார்.

நபி(ஸல்) அவர்கள் சில அறிவுரைகள் வழங்கினார்கள். அவைகளில் ஒன்று:

“நல்லவை அல்லாத காரியங்களை விட்டும் உமது நாவைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அப்படிச் செய்தால் நீர் ஷைத்தான் மீது ஆதிக்கம் செலுத்துவீர்!”

அறிவிப்பவர்-ஹஜ்ரத் அபூஸஈத் குத்ரீ(ரலி)

# பயங்கரவாதத்துக்கு எதிரான முஸ்லிம் இளையர் கருத்தரங்கு





பயங்கரவாதத்துக்கு எதிரான விழிப்புநிலை அவசியம்

Volunteers to help peers shun radical messages like ISIS'

ஜாமியா சிங்கப்பூர், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக், இந்திய முஸ்லிம் நிபுணத்துவக் கழகம், ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து இளையர் கருத்தரங்கை சிறப்பாக நடத்தியது.

முஸ்லிம் இளையர்களிடையே கலாசார, சமூக, வாய்ப்புகளையும், திறன்களையும் மேம்படுத்துவதே இதன் இலக்கு என்று ஜாமியாவின் துணைத் தலைவர் ஹெச்.எம்.சலீம் தமது வரவேற்புரையில் தெரிவித்தார்.

பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு எதிராக, நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய அவசியத்தையும், தீவிரவாதக் கொள்கைகளிலிருந்து நமது இளைய சமுதாயத்தைப் பாதுகாக்க வேண்டிய தேவையையும் வலியுறுத்தும் நோக்கில் இது நடைபெற்றது.

கடந்த அக்டோபர் மாதம் 17ஆம் தேதி MDIS மண்டப அரங்கில் நடைபெற்ற இக்கருத்தரங்கை, உள்துறை அமைச்சின் நாடாளுமன்றச் செயலாளர், அம்ரின் அமீன், தொடங்கி வைத்தார். இளையர்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர். பயங்கரவாதக் கொள்கைகளுக்கு எதிராக நாம் நமது இளையர்களைத் தயார்படுத்த வேண்டிய அவசியத்தை அவர் தமது உரையில் வலியுறுத்தினார்.

நல்லது எது, கெட்டது எது என்பதைப் பகுத்தாய்வு செய்யும் பகுத்தறிவு மிக்க இளையர்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு சமுதாய அமைப்புகளுக்கு உள்ளது என்றும் அவர் எடுத்துரைத்தார்.

கடையநல்லூர் முஸ்லிம் லீக் இளையர் பிரிவைச் சேர்ந்த அமீர் அஸார், உள்துறை மற்றும் ராஜரத்தினம் அனைத்துலகக் கல்விக் கழகம் ஆகியவற்றின் விரிவுரையாளர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர். மத ஈடுபாடு, ஆக்கபூர்வமான வழிகளுக்கு வகை செய்ய வேண்டியது அவசியம், என்பதைப் பேச்சாளர்கள் வலியுறுத்தினர்.

மின்னியல் இணைய அச்சுறுத்தல்கள் அதிகரித்து வருவதை பேச்சாளர்கள் சுட்டிக்காட்டினர். பயங்கரவாதச் சித்தாந்தங்களை எதிர்த்து, நல்லெண்ணங்களை மக்களிடையே, குறிப்பாக இளையர்களிடையே பரப்பும் 20 சமாதானத் தூதுவர்கள் இந்நிகழ்ச்சியில் நியமிக்கப்பட்டு, அவர்களுக்கான அங்கீகாரச் சான்றிதழ் வழங்கப் பட்டது. கடையநல்லூர் சங்கத்தின் சார்பில் அமீர் அஸஹர், அமீர் ரோஷன், இம்ரான் ஆகியோர் சமாதானத் தூதுவர் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.





# PHOTO NEWS

# படச் செய்திகள்



PM Lee Hsien Loong unveiling the plaque commemorating the completion of restoration works at Sultan Mosque



Completion of upgrading and restoration works at Sultan Mosque, 16 Jan 2016




MUIS work plan seminar, 12 Mar 2016



Participants of MUIS work plan seminar, 12 Mar 2016




Mosque Management Board investiture & Mosque Officers Development Scheme Graduation, 2 Apr 2016



PROMAS disbursement & PROMAS performance award ceremony, 6 Feb 2016



Launch of the inaugural Mosque Family Day, 31 Jan 2016



7,000 members of the mosque fraternity from S'pore's 69 mosques participated in the Mosque Family Day

# திரு. லீ குவான் இயூ நினைவு அஞ்சலி நிகழ்ச்சிகள்

## ஜாமியா சிங்கப்பூர்

ஜாமியா சிங்கப்பூர், மறைந்த நாட்டுத் தந்தை லீ குவான் இயூ அவர்களைச் நினைவுகூரும் நிகழ்ச்சியை நடத்தியது. 18.3.2016 மாலை, கேலாங் ஜாமியா தலைமையகத்தின் அல் மாலிக் ஃபைசல் அரங்கில், மலாய் முஸ்லிம் அமைப்புகளும், ஜாமியா ஆதரவாளர்களும், இணைந்து நடத்திய இரங்கல் கூட்டத்தில், நாடாளுமன்ற நாயகர் ஹலீமா யாக்கூப் கலந்து கொண்டார். பல இன, சமய, சமூகத் தலைவர்கள் உள்ளிட்ட 150 பேர், திரு. லீ மறைந்த ஓராண்டு நினைவாக நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.




ஜாமியா சிங்கப்பூரின் நிர்வாகச் செயலாளர், முஹம்மது நூர் சையது, உருக்கமான ஒரு கவிதையை இசைத்து நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். மறைந்த திரு. லீ குவான் இயூ அவர்கள் பல இன சிங்கப்பூரை உருவாக்குவதற்கு மேற்கொண்ட உறுதியையும் உழைப்புத் திறனையும் இக்கவிதை எடுத்துரைத்தது.

ஜாமியாவின் துணைத்தலைவர் டாக்டர் ஹெச்.எம்.சலீம் வரவேற்புரை நிகழ்த்தினார். அதையடுத்து, சிங்கப்பூர் சோக்கா சங்கத்தின் பொது இயக்குநர் திரு. ட்டே இங் கியாட், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் தலைவர் நசீர் கனி, ஜாமியா சிங்கப்பூரின் உப தலைவர் டாக்டர் ஈசா ஹசன், சிங்கப்பூர் தாவோயிஸ் பேரவையின் திரு. ச்சுங் குவாங் ட்டோங் ஆகியோர் உரையாற்றினர்.

நாமும் நமது தலைமுறையினரும் திரு. லீ குவான் இயூ உருவாக்கிய முன்னணி நல்லிணக்க சிங்கப்பூரின் சிறப்புகளை, இளைய தலைமுறையினருக்கும், எதிர்காலச் சந்ததியினருக்கும், எடுத்துரைத்து வழிநடத்த வேண்டும் என்று நாடாளுமன்ற நாயகர் திருவாட்டி ஹலீமா யாக்கூப் தமது உரையில் கூறினார்.

ஜாமியாவின் குழந்தை கல்வி நிலையச் சிறார்கள், மறைந்த நாட்டுத் தந்தை லீ குவான் இயூவைப் பற்றிய உரையாடல் நிகழ்ச்சியைப் படைத்து நெகிழவைத்தனர். வருகையளித்த அனைவருக்கும் மறைந்த தலைவர் திரு. லீ குவான் இயூவை நினைவுகூரும் கையேடு ஒன்றை ஜாமியா வழங்கியது.

## சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் பேரவை

சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் பேரவை மறைந்த நாட்டுத் தந்தை லீ குவான் இயூவை நினைவுகூரும் அஞ்சலி நிகழ்ச்சியை நடத்தியது. 30.3.2016 முன்னிரவு 7.30 மணிக்கு, பென்கூலன் பள்ளிவாசல், மூன்றாம் தளத்தில் இரங்கல் கூட்டம் தொடங்கியது.

தமிழ் முஸ்லிம் அமைப்புகள், முயிஸ், பல சங்கங்களின் பேராளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் முஹம்மது ஜாஃபரின் வரவேற்புரையைத் தொடர்ந்து, பேரவையின் தலைவர் ஃபரியுல்லாஹ் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

“நமது நாட்டுத் தந்தை திரு. லீ குவான் இயூ முன்னுதாரணமான சமூகத் தலைவர். அவருடைய கொள்கையும், நெறிமுறையும், சமூகத் தலைவர்களுக்கு பேருதவியாக அமைந்தன. இந்திய முஸ்லிம் பேரவையும், அதன் இணை அமைப்புகளும், திரு. லீயின் அரசாட்சிக் கொள்கையினால் பெரும்பயன் அடைந்துள்ளன. அதனால் பேரவை அவருக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறது,” என்று அவர் குறிப்பிட்டார்.

“சிங்கப்பூரின் சமய, சமூக ஒருங்கிணைப்புக்கு திரு. லீ குவான் இயூ மேற்கொண்ட வழிமுறைகளும், ஆலோசனைகளும் சிறப்பானவை. அவர் உருவாக்கிய சிறப்புமிக்க சிங்கப்பூர் கலாச்சாரத்தை, அனைவரும் பின்பற்றி முன்னேற வேண்டும்,” என்றும் தமது உரையில் ஃபரியுல்லாஹ் தெரிவித்தார்.

சிங்கப்பூரைச் சிறப்பிக்கும் ‘சின்ன சிறு எழில்நாடு சிங்கப்பூர்’ என்ற நாகூர் ஹனீபா பாடிய இசைப்பாடல் அரங்கில் ஒலிபரப்பப்பட்டது.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் மூத்த அமைச்சர் ஜைனுல் ஆபிதீன் ரஷீத், தமது உரையில் மறைந்த தலைவர் திரு. லீ குவான் இயூ அவர்களின் சாதனைகளை விரிவாக எடுத்துரைத்தார்.

“பல இன, பல சமூக, பலமொழி சிங்கப்பூரை உருவாக்கிய முன்னோடி நாட்டுத் தந்தை அவர். ‘மஜுலா சிங்கப்பூரா’ மலாய் மொழிப் பாடலை தேசிய கீதமாக்கினார். பள்ளிவாசல்களின் கட்டுமானப் பணிக்கு நிதி ஒதுக்கினார். முறையான கல்வி பயிலாத தொழிற்சங்கத் தலைவர் எம்.கே.ஏ





ஜப்பாரை நாடாளுமன்ற உறுப்பினர் ஆக்கினார்," என்று திரு. லீ குவான் இயூவின் நற்பணிகளை மேற்கோள் காட்டினார் ஜைனுல் ஆபிதீன் ரஷீத்.

இளைய தலைமுறையினரும் மறைந்த நாட்டுத் தந்தை லீ குவான் இயூவைச் சிறப்பித்து தமிழிலும், ஆங்கிலத்திலும், உரையாற்றினர். இர்ஷாத் முஹம்மது, வஜீஹா பேகம் பிந்தி அஹ்மானுல்லா, வெங்கடேஸ்வரன் ஆகியோர் திரு. லீயின் மொழி, சமய நல்லிணக்கம், தூய்மை, பசுமைக் கொள்கைகள் பற்றி பேசினர்.

பேரவையின் துணைத் தலைவர் கே.எம். தீன் நன்றியுரை நிகழ்த்தினார். ஆண்டுதோறும் லீ குவான் இயூ நினைவு விழா கொண்டாட பேரவை விரும்புவதாக அவர் கூறினார். ரஃபீக் ஹாஜியார் துவா ஓதியதைத் தொடர்ந்து நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

## தென்காசி முஸ்லிம் சங்க மதரஸா ஆண்டு விழா

சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் மீலாது விழாவையும், அதன் அல்-மதரஸா நூருல் இஸ்லாமின் ஆண்டு விழாவையும் சிறப்பாக நடத்தியது. சுல்தான் பள்ளிவாசல் இணை மண்டபத்தில், கடந்த பிப்ரவரி மாதம் 14ஆம் நாள், பிற்பகல் 2 மணி முதல் மாலை 7 மணி வரை, சங்கத்தின் தலைவர் ஹாஜி ஹஸன் குத்தூஸ் தலைமையில், இவ்விழா நடைபெற்றது.

மதரஸா மாணவர்கள் திருக்குர்ஆன் வசனங்களை ஓதியதைத் தொடர்ந்து, நிகழ்ச்சி துவங்கியது. சங்கத்தின் செயலாளர் ஹாஜி முஹம்மது ஜாஃபர் வரவேற்புரையாற்றினார்.

கல்வி அமைச்சு, மற்றும் சமூக, குடும்ப வளர்ச்சி அமைச்சின், நாடாளுமன்றச் செயலாளர், இணைப் பேராசிரியர் டாக்டர் முஹம்மது ஃபைசல் இப்ராஹிம், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அவர் மாணவர்களுக்கு கல்வி உபகார நிதியையும், தொண்டூழியர்களுக்கும், மாணவர்களுக்



கும், விருதுகளையும் வழங்கிச் சிறப்பித்தார். பென்கூலன் பள்ளிவாசலின் இமாம், ஹாஜி அப்துல் கய்யூம் பாகவி, சிறப்புரையாற்றினார்.

சமுதாயத்தின் பல முக்கிய அமைப்புகளின் பிரமுகர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு, மதரஸா மாணவர்களின் பல வகையான படைப்புகளைக் கண்டு பாராட்டு தெரிவித்தார்கள். விழாவின் நிறைவாக துஆ ஓதி அனைவருக்கும் தப்ரூக் வழங்கப்பட்டது.

## ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்க பொன்விழா அறக்கொடை நிகழ்ச்சி

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம் (UIMA), அதன் 50ஆம் ஆண்டு பொன்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது. 1964ல் தொடங்கப்பட்ட இச்சங்கம், சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் சமூகத்தின் கல்வி, பொருளியல் மேம்பாட்டுக்குப் பாடுபட்டு வந்துள்ளது.

தொடக்ககாலத்திலிருந்தே கல்வி வளர்ச்சிக்கு சங்கம் வழங்கிய ஆதரவுக்கு ஓர் எடுத்துக்காட்டு, அதன் லிட்டில் டால்ஃபின்ஸ் பிளே ஸ்கூல் பள்ளி. எல்லா பிள்ளைகளுக்கும் கல்விப் பராமரிப்பு வழங்குவதே அதன் நோக்கம். சங்கத்தின் விரிவான கல்விச் சேவையை மூத்த தலைமுறையினர் நன்கு அறிவார்கள்.

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்க, பொன் விழாவை முன்னிட்டு, 7.11.2015 அன்று மாலை ஆர்ச்சர்ட் ஹோட்டலில் அறக்கொடை தேனீர் உபசரிப்பு நிகழ்ச்சியை நடத்தியது. வசதி குறைந்த பிள்ளைகளுக்கு உதவ, 50,000 வெள்ளி நிதி திரட்டுவது சங்கத்தின் இலக்கு. துணைப் பிரதமர் திரு. தர்மன் சண்முகரத்னம், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

விருந்து உபசரிப்பில் கலந்து கொள்பவர்கள், $100 முதல் $1,000 வரை நன்கொடை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நமது எதிர்காலத் தலைமுறையினரின் மேம்பாட்டுக்கான செயல் திட்டமே இது என்று தெரிவித்து, அழைப்பிதழை பலருக்கும் சங்கம் அனுப்பியது.

# நவீன சிங்கப்பூரின் தந்தை லீ குவான் இயூ

மறைந்த தலைவர் மாண்புமிகு லீ குவான் இயூ அவர்களைப் பற்றி, எழுத்தாளர் ஜே.எம்.சாலி, நவீன சிங்கப்பூரின் தந்தை லீ குவான் இயூ எனும் நூலை இயற்றியிருக்கிறார். அவருடைய அரும்பணிகளை இளைய தலைமுறையினருக்கு எட்டச் செய்வதே இதன் இலக்கு என்று நாடியிடம் அவர் தெரிவித்தார்.


தோற்றமும் வளர்ச்சியும், பிரதமர் லீ குவான் இயூ, சிங்கப்பூர் குடியரசு, பத்து ஆண்டுகளில், சிங்கப்பூர் இந்தியர்கள், வெற்றிகரமான வாழ்க்கை, செயற்கரிய செய்த திரு. லீ, மாமனிதருக்குப் புகழாரம் முதலான 23 பகுதிகள் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன.

நூலின் ஓர் அத்தியாயம் முஸ்லிம் சமூகம் அஞ்சலி. அதன் ஒரு பகுதி: "நவீன சிங்கப்பூரின் தந்தை லீ குவான் இயூ அவர்களுக்கு ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் புகழஞ்சலி செலுத்தியது. சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றமான முயிஸ், மெண்டாக்கி ஆகியவற்றுடன் நாடாளுமன்ற நாயகர் ஹலீமா யாக்கூப், அமைச்சர்கள், சமூக சமயத் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் மறைந்த தலைவர் லீ குவான் இயூ அவர்களுக்கு இரங்கல் தெரிவித்து வழங்கிய செய்திகளும் உரைகளும் சிறப்புக்குரியவை."

"திரு. லீ குவான் இயூவின் அரசியல் திறன், அசைக்க முடியாத நம்பிக்கைகள், முற்போக்கான செயல் திட்டங்கள் முதலானவற்றை ஹலீமா யாக்கூப் விரிவாக தமது உரையில் எடுத்துரைத்தார்." "சிங்கப்பூர் முஸ்லிம்கள் சிறப்பாகச் செயல்படுவதற்கு திரு. லீ குவான் இயூ பெரிதும் உதவினார். முன்னேறிச்செல்லும் சிங்கப்பூரில் யாரும் பின்தங்கி விடக்கூடாது என்பதில் அவர் அதிக அக்கறை செலுத்தினார்," என்று முஸ்லிம் விவகாரங்களுக்குப் பொறுப்புவகிக்கும் அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்தார்.

"குறிப்பாக, சிறுபான்மைச் சமூகத்தினர் எவரும் பின்தங்கிவிடக்கூடாது என்பதில் திரு. லீ கண்ணும் கருத்துமாக இருந்தார். வெற்றி பெறுவதற்கான கொள்கைகளை நமது முஸ்லிம் மக்கள் புரிந்துகொண்டு வாழ்க்கையில் முன்னேறிச் செல்வதற்கான வழிமுறைகளைக் காட்டினார். நமது சமூகம் அவர் காட்டிய வழியைப் பற்றிக்கொண்டு சாதித்துள்ளது எனக் கருதுகிறேன்," என்று அவர் குறிப்பிட்டார்.

"முஸ்லிம் சமூகத்திற்கு திரு. லீ ஆற்றிய அளப்பரிய பங்குகளில் முக்கியமானது, பள்ளிவாசல் கட்டிட நிதி. 1975ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட அந்த நிதியின் உதவியாலும், மத்திய சேமநிதியின் மூலம்




நன்கொடை வழங்குதன் மூலமாகவும், புதிய பள்ளிவாசல்களைக் கட்டுவதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் திரு. லீ, முஸ்லிம் சமூகத்திற்குப் பெரிய அளவில் உதவியிருக்கிறார். அன்றைக்கு அவரால் நிறுவப்பட்ட நிதிமுறை இன்றைக்கு முஸ்லிம் சமூகம் 23 புதிய தலைமுறை பள்ளிவாசல்களைக் கட்டி முடிக்க வழிவகுத்துள்ளது," என்று டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் தெரிவித்தார்.

"சிங்கப்பூரில் இந்திய முஸ்லிம் சமூகம், அளவில் சிறியதாக இருந்தபோதிலும், அதற்கு திரு. லீ உரிய முன்னுரிமை வழங்கி, தழைத்தோங்கச் செய்தார். மறைந்த மகானுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறோம்," என்று கடையநல்லூர் முஸ்லிம் லீக் தலைவர் நசீர் கனியும், துணைத் தலைவர் மசூதும், இரங்கல் செய்தியில் குறிப்பிட்டனர். "சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீகின் பெயரைப் பிரதிபலிக்கும் கடையநல்லூர் ஸ்ட்ரீட் அமைந்துள்ளது. உமறுப்புலவர் தமிழ்ப் பள்ளி, 1941ல் அமைக்கப்பட்டது. ஹாஜி எம்.கே.ஏ. ஜப்பார் மூலம் தமிழ்பேசும் இந்திய முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினரை திரு. லீ அறிமுகப்படுத்தினார். ஜப்பார் தமிழ் மொழியிலேயே நாடாளுமன்றத்தில் உரையாற்றுவார். இதுவும் இச்சமூகத்திற்குக் கிடைத்த பெருமை. திரு. லீ குவான் இயூவின் மறைவு பேரிழப்பு," என்று சங்கம் தெரிவித்தது. நவீன சிங்கப்பூரின் தந்தை லீ குவான் இயூ நூலின் விலை 6 வெள்ளி. கிடைக்கும் இடம்: ரஹ்மத் பதிப்பகம் தமிழ் புத்தகாலயம் 01-02 டன்லப் ஸ்ட்ரீட் சந்திப்பு.

# ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா

*5 ஆண்டுகளில் 50 நிகழ்ச்சிகள் படைத்த வரலாறு!*

*ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை)யின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா 22.11.2015 அன்று சிங்கப்பூரில் உமறுப்புலவர் தமிழ் மொழி நிலைய உள்ளரங்கில் சிறப்பாக நடைபெற்றது.*

*கல்வியைக் கருப்பொருளாய் கொண்டு நிகழ்ந்த இவ்விழாவில், மலேசிய வானொலி, மற்றும் தொலைக்காட்சிப் படைப்பாளர், வழக்குரைஞர் திரு. எஸ். பாண்டித்துரை "கற்க கசடற" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.*

*கடந்த 5 ஆண்டுகளாக சிங்கப்பூரில் கல்வி சார்ந்த சமூகப் பணிகளை செய்துவரும், இச் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு சிறப்பு மலர் வெளியீடு செய்யப்பட்டு, அதன் முதல் பிரதியை எம்.இ.எஸ். குழுமத்தின் தலைமை நிர்வாகி ஹாஜி எஸ்.எம். அப்துல் ஜலீல் பெற்றுக்கொண்டார்.*

*சிங்கப்பூரின் 50ஆவது ஆண்டு பொன்விழாக் கொண்டாடி மகிழும் வேளையில், ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் ஆரம்பித்து 5 ஆண்டுகளில் 50 நிகழ்ச்சிகளை வெற்றி கரமாக நடத்தி முடித்திருக்கிறது என்பது குறிப் பிடத்தக்கது.*

*"பயங்கரவாத மிரட்டல்களை எதிர்நோக்கும் இன்றைய சூழ்நிலையில், நாம் அனைவரும் ஒன்றுபட்டு மிகுந்த விழிப்புணர்வோடு செயல்பட்டு, சிங்கப்பூரின் பாதுகாப்பிற்கும் அமைதிக்கும், நமது பங்களிப்பை வழங்கவேண்டும்," என்று தனது வரவேற்புரையில் கேட்டுக்கொண்டார், சங்கத்தின் தலைவர் கணக்காய்வாளர், டாக்டர் முஹிய்யத்தீன் அப்துல் காதர்.*

*ஜமால் முஹம்மது கல்லூரியின் முதல்வர் டாக்டர் எஸ்.முஹம்மது சாலிஹ் தலைமையில், கல்லூரியின் தாளாளர் டாக்டர் ஏ.கே.காஜா நஜீமுதீன், துணைச் செயலாளர் ஹாஜி எம்.ஜே. ஜமால் முஹம்மது ஆகியோர் சிறப்பு விருந்தினர் களாகக் கலந்துகொண்டனர். கல்லூரியின் துணை முதல்வர் டாக்டர் ஏ.முஹம்மது இப்ராஹீம், கூடுதல் துணை முதல்வர் டாக்டர் எஸ்.இஸ்மாயில் முகைதீன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரியின் மேலாண்மைத் துறை இயக்குநர் டாக்டர் கே.அப்துஸ் ஸமது மற்றும் சுயநிதிப் பிரிவு இயக்குநர் பேராசிரியர் கே.என்.அப்துல் காதர் நிஹால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்கத்தின் செயலாளர் அப்துல் சுஹபான், மற்றும் செயலவை உறுப்பினர் ஃபரீஜ் முஹம்மது ஆகியோர் நிகழ்ச்சி நெறியாளராக, இவ்விழாவினை வழிநடத்தினர்.*

*டாக்டர் நாகூர் ரூமி எழுதிய கல்லூரியைப் பற்றிய சிறப்புப் பாடலை "நூருல் ஹுதா" இசைக்குழுவினர் வழங்கியது செவிகளுக்கு விருந்தாக அமைந்திருந்தது.*



ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் குடும்பதின நிகழ்ச்சி

*ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), ஞாயிற்றுக்கிழமை 13.03.2016 அன்று, காலை 10 மணி முதல், மாலை 6 மணி வரை, "சமய நல்லிணக்க குடும்பதின நிகழ்ச்சி" ஒன்றை, சிங்கப்பூர் (EAST COAST PARK) கிழக்கு கடற்கரைப் பூங்காவில் மிகச் சிறப்பாக நடத்தியது.*

*ஒற்றுமையைப் பறைசாற்றும் வகையிலும், சமய நல்லிணக்கத்தை மேம்படுத்தி ஒன்றுபட்ட சமுதாயமாக வாழ்வதன் அவசியத்தை வலியுறுத்தியும், நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில், மாணவ மாணவிகளுக்கான ஓவியப்போட்டி, மணலில் வீடுகட்டும் போட்டி, பெற்றோர்களுக்கான போட்டி போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன. மதிய உணவும், தேநீர் விருந்தும், அதிர்ஷ்டக் குலுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு நடத் தப்பட்ட இக்குடும்பதின நிகழ்ச்சியில், சுமார் 200 பேர் கலந்து சிறப்பித்தனர்.*



# நாகூர் தர்கா கந்தூரி விழா

இந்திய முஸ்லிம் மரபுடைமை நிலையம் நாகூர் தர்காவில், ஷாஹுல் ஹமீது நாயகரைச் சிறப்பிக்கும் கந்தூரி விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

10.3.2016 அன்று மாலை, தெலுக் ஆயர் வீதி தர்காவில், மவ்லூது ஓதப்பட்டு, கொடியேற்றப் பட்டது. உஸ்தாத் மில்லத் இஸ்மாயில் ரியாஜி, நாகூர் ஆண்டகையின் நல்லுபதேசங்களை தமது உரையில் எடுத்துரைத்தார். ஆன்மீகம், மனிதநேயச் சேவை, சமூக முன்னேற்றக் கட்டமைப்பு ஆகியவற்றை ஷாஹுல் ஹமீது நாயகர் உபதேசித்து, சமுதாய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டார்கள்.

நாகூர் தர்கா நிர்வாகக் குழுவின் துணைத் தலைவர் ஹாஜி ஷரஃப்தீனும், செயலாளர் ஹாஜி நசீர் கனியும், அனைவரையும் வரவேற்றனர். மக்ரிப் தொழுகைக்குப் பிறகு துஆ ஓதி கொடியேற்றப் பட்டது.

## கந்தூரி விழா

கொடியேற்றத்தை அடுத்து, 19.3.2016 சனிக்கிழமை மாலை 5 மணியிலிருந்து 7 மணி வரை, நாகூர் ஆண்டகை, ஹளரத் சையிது ஷாஹுல் ஹமீது நாயகரைச் சிறப்பிக்கும் கந்தூரி விழா நிகழ்ச்சிகள் மரபுடைமை நிலையத்தில் நடைபெற்றன. தர்காவின் நிர்வாகத் தலைவர் ஹாஜி எஸ்.எம்.ஜலீலும், மற்றவர்களும், சிறப்பு விருந்தினர் உள்துறை அமைச்சின் நாடாளுமன்றச் செயலாளர், அம்ரீன் அமீனை வரவேற்றனர்.

முன்னாள் அமைச்சர் ஜைனல் ஆபிதீன் ரஷீத், முயிஸ் பேராளர்கள், இந்திய முஸ்லிம் அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் முன்னிலை வகித்தனர். பள்ளிவாசல் இமாம்கள் பலரும் கலந்து கொண்டனர். மரபுடைமை நிலைய நிர்வாகச் செயலாளர், ஹாஜி நசீர் கனி, அனைவரையும் வரவேற்று நிகழ்ச்சியை நெறிப்படுத்தினார்.

சிங்கப்பூர் சமூக சமய மேம்பாட்டுக்கு, இந்திய முஸ்லிம்கள் அரிய பங்காற்றியுள்ளதை, முன்னாள் அமைச்சர் ஜைனல் ஆபிதீன் ரஷீத், தமது உரையில் வெகுவாகப் பாராட்டினார். முன்னோடிகளைச் சிறப்பிக்கும் இத்தருணத்தில், அவர்களின் வழியில், இளைய தலைமுறையினர் நற்பணிகளைத் தொடர வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். 1970களில், நாகூரிலுள்ள ஷாஹுல் ஹமீது நாயகர் தர்காவிற்குச் சென்றதை ஜைனல் ஆபிதீன் நினைவு கூர்ந்தார்.

முதல் முறையாக, இந்திய முஸ்லிம் மரபுடைமை நிலையம் நாகூர் தர்காவுக்கு வருகையளிக்கும் நல்வாய்ப்பைத் தந்த நிர்வாகக்



குழுவினருக்கு சிறப்பு விருந்தினர் நாடாளுமன்ற உறுப்பினர், அம்ரின் அமீன் நன்றி பாராட்டினார்.

அவர் மற்ற பிரமுகர்களுடன் இணைந்து, மாணவர்களுக்கான $10,000 கல்வி உதவித் தொகையை வினியோகித்தார். ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வரும் நிதியுதவி இது.

உஸ்தாத் ஹாஜா மைதின் பைஸி சன்மார்க்க உரையாற்றினார். இஸ்லாமிய தீன்நெறிப் பாடல்கள் இசைக்கப்பட்டன.

அனைவரும் இணைந்து யாசீன் ஓதி முடித்ததும், நிர்வாகச் செயலாளர், ஹாஜி நசீர் கனியின் நன்றியுரையைத் தொடர்ந்து, மக்ரிப் தொழுகைக்கு முன் கந்தூரி விழா நிறைவு பெற்றது. வருகையளித்திருந்த அனைவருக்கும் தப்ரூக் வழங்கப்பட்டது.

நமது முன்னோர்களால் 1830ல் தெலுக் ஆயர் வீதியில் கட்டி முடிக்கப்பட்ட நாகூர் தர்கா 1974ஆம் ஆண்டில் தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டது. சிங்கப்பூரின் முன்னைய அதிபர், எஸ்.ஆர்.நாதன் 20.5.2011ல் தர்காவை மரபுடைமை நிலையமாக அதிகாரபூர்வமாகத் திறந்து வைத்தார். மறுவாரம் ஷாஹுல் ஹமீது நாயகரைச் சிறப்பிக்கும் மவ்லூது, மரபுடைமை நிலைய மேல்தளத்தில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஆண்டுதோறும் ஜமாதுல்ஆகிர் மாதம் கந்தூரி விழாவும் மவ்லூதும் நடைபெற்று வருகின்றன.

சிங்கப்பூரிலிருந்து நாகூருக்கு, ஒவ்வொரு ஆண்டும் கந்தூரி விழாவுக்குக் கொடி அனுப்பப்படுவதை அறிவோம். இந்த ஆண்டு, ஜாமியா சூலியா பள்ளிவாசலில் மவ்லூது ஓதப்பட்டு கொடி அனுப்பப்பட்டது. பெரும் எண்ணிக்கையில் மக்கள் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டதாக பள்ளிவாசல் மேலாண்மை செயற்குழுவின் தலைவர் ஷேக் பக்ருதீன் தெரிவித்தார்.